www.Padasalai.Net www.TrbTnpsc.com

DATE

4. இலக்கிய நயம் பாராட்டுக.

வெட்டியடிக்குது மின்னல் – கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம் – கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா – என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய – மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!

– பாரதியார்

ஆசிரியர் : முன்னுரை

இப்பாடலைப் பாடியவர் தேசியக்கவி என்று அழைக்கப்பட்ட மகாகவி பாரதியார் ஆவர். இளமையிலே கவி பாடியதால் பாரதி என்று அழைக்கப்பட்டவர், கண்ணன்பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் என்னும் முப்பெரும் நூலைத் தந்தவர். 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்ற பாடல் வரி மூலம் எல்லோராலும் அறிய படுகின்றவர்.

திரண்ட கருத்து :

மின்னலானது மிகுந்த வெளிச்சத்துடன் அடிக்கின்றது, பொங்கிவரும் கடல் அலையானது சூறைக்காற்றால் விண்ணைத் தொடும் அளவிற்கு பொங்கி அடிக்கின்றது. மேகமானது ஒன்றோடு ஒன்று மோதி எழுப்பும் ஓசையோ காது கேட்க முடியாத ஓசையாக கொட்டி இடிக்கின்றது. காற்றானது வேகமாக 'கூ கூ வென' ஓசையுடன் விண்ணைக் குடைகின்றது.

மழைத்துளி மண்ணில் விழும்போது எழும் ஓசையோ தாளங்கள் போடுவது போலக் கேட்கின்றது. மழையைப் பொழிந்து பொழிந்து களைக்கின்றது வானம். எட்டுத்திசையும் இடியின் ஒலி முழங்க மழை எப்படி வந்தது எனப் பாரதியார் கேட்கிறார்.

மையக் கருத்து

பெருங்காற்றுடன் பலத்த இடியோசையுடன் மேகம் பொழியும் மழையும் இசைத்தாளத்திற்கு ஏற்ப மண்ணை வந்து அடைகின்றது. மழை விழும் ஓசை இனிய தாளத்தைத் தருகின்றது.

தொடைநயம்

மோனைநயம் : முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனையாகும்.



Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

DATE

சீர்மோனை:

வெட்டியடிக்குது - விரத் - விண்ணை

கொட்டி - கூவென்று - குடையுது - காற்று

சட்டச்ச - சட்டச்ச

எட்டுத்திசையும் - எவ்வணம்

எதுகை நயம்:

முதலெழுத்து அளவு ஒத்துநிற்க இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகையாகும்

சீர் எதுகை:

சட்டச்ச - சட்டச்ச

அடி எதுகை:

வெட்டியடிக்குது

கொட்டி

சட்டச்ச

எட்டுத்திசையும்

சொல்நயம்:

பாரதியார் இப்பாடலில் பயன்படுத்திருக்கும் சொற்களின் ஒலியும் பொருளும் ஒரு பெரும்புயலையே நம் கண்முன் காட்டுவனவாக உள்ளன. புதிய ஒலியின்பத்தையும் புதிய பொருளுணர்ச்சியையும் பாரதியார் இப்பாடலில் பயன்படுத்தியுள்ளார்.

அணிநயம்:

மழையின் சிறப்பை உணர்த்த மழை பெய்வதற்கு முன்னால் நிகழும் நிகழ்வுகளை எல்லாம் உயர்வாகக் கூறியுள்ளதால் இப்பாடலில் உயர்வு நவிற்சி அணி இடம் பெற்றுள்ளது.

சந்த நயம்

ஏற்ற இசைக்கருவியுடன் இசைத்துப்பாடினால் பாடுவோருக்கும் கேட்போரும் மிகுந்த இன்பம் தரும் விதத்தில் தாள நயத்துடன் பாரதியார் இப்பாடலைப் பாடியுள்ளார். இப்பாடல் சிந்துப் பா வகையைச் சார்ந்தது.

முடிவுரை:

எல்லா நயங்களையும் அமையப் பெற்று பாரதியார் இப்பாடலைப் பாடித் தமிழன்னைக்கு மேலும் அழகு சேர்த்துள்ளார். இதனைப் போன்ற பாடல்களை நாமும் எழுதி தமிழன்னையை மெருகேற்று

classmate



Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

DATE

**இலக்கிய நயம் பாராட்டல்**

பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி
பிறமொழிக்கு சிறப்பளித்த பிழையை நீக்க
ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்
உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?
கற்றுணர்ந்தே அதன்இனிமை காண்பாய் என்று
கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்
தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட
தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம்.

- நாமக்கல் கவிஞர்

"தமிழே இனிமை"

**முன்னுரை:**

விடுதலைப்போராட்ட வீரர்கள் வழிநடையாகப் பாடுவதற்காக நாமக்கல் கவிஞர் இயற்றிய 'கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்ற பாடல் சிறந்த ஒரு பாடலாகும். தமிழ்மொழி மீது மிகுந்த ஆர்வமும், பற்றும் கொண்ட நாமக்கல் கவிஞர் எழுதியுள்ள இப்பாடலில் அமைந்துள்ள நயங்களைக் காண்போம்.

**திரண்ட கருத்து:**

நாம் பிறந்த இந்தத் தமிழ்நாட்டில், நம் உணர்வை வெளிக்கொணர காரணமாக இருந்த தமிழ்மொழியாகிய தாயைப் பின்னால் தள்ளி பிறமொழிக்குச் சிறப்பளித்த பிழையைச் செய்தோம். ஊற்றுப்போல பெருகிவரும் அன்பு உரைகளால் இவ்வுலகையே சிந்திக்க வைத்த தமிழ்மொழிக்கு நிகரான மொழி இந்த நிலவுலகில் வேறு உண்டோ?

அத்தகைய இனிமையான மொழியைக் கற்றுணர்ந்தே அதன் இனிமையைக் காண்பாய் என்று கூறி, கம்பனையும் வள்ளுவனையும் நமக்கு அறிமுகப்படுத்தி அவர்களின் தமிழ்ப்பற்றைச் சுட்டிக்காட்டி தவறு செய்த நம் அகக்கண்களைத் திறந்துவிட்ட பாரதியார் ஒரு தெய்வக்கவி என்பது உறுதியானதே. பாரதி ஓர் ஆசான் என்பதை அறிவோம்.

**மையக்கருத்து**

தான் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழியே சிறந்த மொழி என்றுரைக்கின்ற மகாகவி பாரதி நம்முடைய ஆசான் என்று உணரவேண்டும். தமிழ்மொழியின் சிறப்பையும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

**சொல்நயம்:**

'ஆற்றல் நிரம்பிய சொற்கள் தாமாகப் பொங்கி வழிவதுதான் கவிதை'
- வோர்ட்ஸ்வொர்த்

சிறந்த சொற்களைக் கொண்டு கவிதையை நயம்படப் பாடியுள்ளார் கவிஞர் இப்பாடலில் அடைச்சொற்களைப் பயன்படுத்தியுள்ளார் கவிஞர்.



Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com



சான்று:

அன்புரையால், உழுங்கவைத்தியுலகம், தெற்றென, ஆசான், இச்சொற்களைத் திறம்பட அமைத்துள்ளார்.

பொருள்நயம்:

தமிழின் பெருமையை உணர்ந்தவர் பாரதி, நாமோ தமிழை புறக்கணிக்கின்றோம், தமிழின் தனித்தன்மையை உணர்ந்த பாரதி தமிழ்மொழிபோல தரணியிலே சிறந்த மொழி இல்லை என்கிறார். தமிழில் சிறந்த கவிஞர்களை நமக்கு அறிமுகம் செய்து வைக்கின்றார். பாரதியின் சிறப்பையும், தமிழின் பெருமையையும் திறம்படக் கவிஞர் எடுத்துக்கூறுகின்றார்.

தொடைநயம்:

பாடலில் மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை ஆகியவற்றைக் கொண்டு தொடுப்பது தொடையாகும்.

மோனை நயம்:

"தலை எழுத்து ஒப்பது மோனை"

- தொல்காப்பியம்

சீர்களிலோ, அடிகளிலோ முதலெழுத்து ஒன்றி வர தொடுப்பது மோனையாகும்.
இப்பாடலில் சீர்மோனை பயின்று வந்துள்ளது.

பெற்றெடுத்த - பின்னார் - பிறமொழிக்கே - பிழைபட
ஊற்றெடுத்தே - உழுங்க - உலகத்தில் - உண்டோ
கற்றுணர்ந்தே - கண்பாய் - கம்பனொடு - காட்டி
தெற்றெனநம் - திறந்து - தெய்வக்கவி - திண்ணம்

எதுகைநயம்:

"தலை எழுத்து ஒப்பது மோனை
அஃது ஒழிந்த வாற்றின் எதுகை ஆகும்"

- தொல்காப்பியம்

பாடலின் அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாவது எழுத்து ஒன்றிவருவது எதுகை எனப்படும்.
இப்பாடலில் சீர்எதுகை மற்றும் அடிஎதுகை பயின்று வந்துள்ளது.

சீர்எதுகை:

தெற்றெனநம் - திறந்து

அடி எதுகை:

பெற்றெடுத்த
ஊற்றெடுத்த
கற்றுணர்ந்த
தெற்றென



Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

DATE

**சந்தநயம் :**

"சந்தம் தமிழுக்குச் சொந்தம்" இசைத்துப் பாடினால், இப்பாடலை ஏற்ற இசைக்கருவிகளுடன் கவி இன்பத்தைத் தரும் பாடுவோருக்கும் கேட்பவருக்கும் மிகுந்த சந்த நயங்களுடன் கவிஞர் இப்பாடலை இயற்றியுள்ளார்.

இப்பாடல், எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்த வகையைச் சார்ந்தது. இப்பாடல் அகவலோசையில் அமைந்துள்ளது.

**அணிநயம் :**

"அணி செந்தமிழ்க் கவிதைக்குப் பணி"

இப்பாடலில், தமிழ்மொழியின் சிறப்பினைப் பாரதியார் மிகவும் உயர்வாக எடுத்துக் கூறுகின்றார், அதைப்போன்று பாரதியின் பெருமையையும் இப்பாடலில் ஆசிரியர் உயர்த்திக் கூறுவதால் இப்பாடலில் உயர்வு நவிற்சி அணி இடம் பெற்றுள்ளது.

**சுவைநயம் :**

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டும் மெய்ப்பாடு என்ப"

– தொல்காப்பியம்

தமிழ் மொழியின் பெருமையையும், பாரதியின் பெருமையையும் பற்றி இப்பாடல் உரைப்பதால் இப்பாடலில் பெருமிதச் சுவை அமைந்துள்ளது.

**முடிவுரை :**

நாமக்கல் கவிஞர் இப்பாடலில் கவிதைக்குரிய நயங்களை எல்லாம் பொருத்தமாக அமைத்து தமிழன்னையின் பெருமையை உலகறிய செய்துள்ளார். கவிநயங்களால் தமிழன்னைக்குப் புகழ் சேர்த்துள்ளார்.

மாணவர்களே!

கேள்வியைக் கவனித்து எத்தனை நயங்கள் கேட்டிருக்கின்றதோ அத்தனை நயங்கள் மட்டும் எழுதினால் போதுமானதாகும்.

classmate

PAGE

Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

DATE

**இலக்கிய நயம் பாராட்டுக**

பிறப்பினால் எவர்க்கும் – உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் – நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே – உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே – அண்டித்
தீண்ட ஒண்ணாதார்!

–கவிமணி தேசிக விநாயகம்

## 'நல்லதைச் செய்வோம்'

**முன்னுரை**

தமிழின் மீது அளவற்ற அன்பு கொண்ட கவிமணி, 'குழந்தைகள் கவிஞர்' என்று அழைக்கப்படுகின்றார். 'தோட்டத்தில் மேயுது வெள்ளை பசு' என்ற பாடல் வரி மூலம் குழந்தைகளால் மிகவும் நேசிக்கப்படுபவர். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் எழுதியுள்ள இப்பாடலின் நயங்களைக் காண்போம்.

**திரண்ட கருத்து:**

பிறப்பை வைத்து யாருக்கும் இந்த உலகில் பெருமை வருவதில்லை; உலகில் சிறந்தவர்களாக இருக்க வேண்டும் என்றால் நல்ல செயல்களைச் செய்ய வேண்டும். உலகில் மேல்குலத்தோர் என்போர் தன் வாழ்வில் நன்மை செய்பவர்களே! தீமை செய்பவர்களே இந்த உலகில் தீண்டதகாதவர்கள்.

**மையக்கருத்து**

நன்மை செய்தால் அவன் மேன்மையடைவான்; தீமை செய்தால் ஒதுக்கப்படுவான்.

**சொல்நயம்**

சொற்களைச் சிறந்த முறையில் வைப்பது வசனம்;

சிறந்த சொற்களைச் சிறந்த முறையில் வைப்பது கவிதை

சிறந்த சொற்களைக் கொண்டு கவிதையை நயம்பட பாடியுள்ளார் கவிஞர் இப்பாடலில் அடைச் சொல்லையும், அகராதி சொல்லையும் கவிஞர் பயன்படுத்தியுள்ளார்

**சான்றாக,**

PAGE

classmate

Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

DATE

அடைச்சொல் - அண்டித் தீண்ட

அகராதி சொல் - ஒண்ணாதார் - ஒவ்வாதவர்

**பொருள்நயம்:**

இவ்வுலகில் மேற்குலத்தார், தீண்டத்தகாதவர் என்பது பிறப்பினால் வருவதல்ல அவரவர்களின் செய்கையால் வருகின்றது என்ற [illegible] பொருளை வலியுறுத்த சிறந்த சொற்களைக் கொண்டு கவிஞர் இக்கவிதையை இயற்றியுள்ளார்.

**தொடைநயம்:**

பாடலில், மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை ஆகியவற்றைக் கொண்டு தொடுப்பது தொடையாகும்.

**மோனை நயம்:**

"அடிதொறுந்தலை எழுத்து ஒப்பது மோனை"

- தொல்காப்பியம்

சீர்களிலோ, அடிகளிலோ முதலெழுத்து ஒன்றிவர தொடுப்பது மோனையாகும்.
இப்பாடலில் சீர்மோனை பயின்று வந்துள்ளது.

**சான்று:**

பிறப்பினால் - பெருமை
சிறப்பு - செய்கை
நன்மை - நாடும்
தின்மை - தீண்ட

**எதுகைநயம்**

"அடிதொறுந்தலை எழுத்து ஒப்பது மோனை
அஃது ஒழிந்த வற்றின் எதுகை ஆகும்"

- தொல்காப்பியம்.

பாடலின் அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாவது எழுத்து ஒன்றிவருவது எதுகை எனப்படும்.
இப்பாடலில் அது எதுகை பயின்று வந்துள்ளது.

**சான்று:**

பிறப்பினால்
சிறப்பு
நன்மை
தின்மை



Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

DATE

**இயைபு நயம்:**

"இறுவாய் ஒப்பின் அது இயைபு என மொழிப"

- தொல்காப்பியம்

ஒரு செய்யுளில் ஒன்றுக்கு மேற்பட்ட அடிகளின் இறுதி எழுத்து அல்லது இறுதி சொல்லோ, அல்லது ஒரே அடியில் உள்ள சீர்களின் இறுதிகள் ஒன்றி வந்தாலும் அஃது இயைபு எனப்படும்.

இப்பாடலில் அடி இயைபு பயின்று வந்துள்ளது

**சான்று:**

வாராதப்பா — மேற்குலத்தார்

வேண்டுமப்பா — ஒன்றாதார்

**முரண் நயம்:**

"மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே"

- தொல்காப்பியம்

செய்யுளில், சொல் அல்லது பொருள் முரண்பட்டு நயம் பயக்கும் வகையில் அமைவது முரண் தொடையாகும்.

இப்பாடலில் இடம் பெற்றுள்ள முரண் தொடை

நன்மை x தின்மை

**சந்த நயம்:**

'சந்தம் தமிழுக்குச் சொந்தம்"

இப்பாடலை ஏற்ற இசைக் கருவிகளுடன் இசைத்துப் பாடினால், பாடுவோர்க்கும் கேட்பவருக்கும் மிகுந்த சுவை இன்பத்தைத் தரும் சந்த நயங்களுடன் கவிஞர் இப்பாடலை இயற்றியுள்ளார்

இப்பாடல் சிந்துப்பா வகையைச் சார்ந்தது.

**அணி நயம்:**

"அணி செந்தமிழ் கவிதைக்குப் பணி"

இப்பாடலில் உள்ளதை உள்ளபடியே கவிஞர் கூறுவதால் இப்பாடலில் இயல்பு நவிற்சி அணி பயின்று வந்துள்ளது

**முடிவுரை:**

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை இப்பாடலில் கவிதைக்குரிய நயங்களை எல்லாம் அமைத்து, கவி நயங்களால் தமிழன்னைக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

classmate



Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

DATE

இலக்கிய நயம் பாராட்டுக

அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான் கண்டேன், திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ?

பாரதிதாசன்

'அழகு நிலா'

**முன்னுரை :**

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பெருங்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன். பாரதியார் மீது அதிக அன்பு கொண்டவர். புரட்சி மிக்க கருத்துக்களையும், அதிக அவலங்களையும் தம் பாடல்களில் எடுத்துச் சொன்னவர். தமிழ் மீது அதிக பற்றுக் கொண்டவர். 'தமிழுக்கும் அமுது என்று பேர்' என்று உரைப்பவர். பாரதிதாசன் அவர்கள் எழுதியுள்ள இப்பாடலின் நயங்களைக் காண்போம்.

**திரண்ட கருத்து :**

மாலை நேரம் எங்கும் இருள் பரவியிருக்கும். கண்களுக்குப் பொருள்கள் புலப்படுவதில்லை. ஆனால், அந்தக் காரிருளிலும் ஒரு சிரிப்பு. அதுதான் வானத்தில் ஒளிமுத்தாகக் காட்சித் தரும் நிலா, குளிர்ச்சியான ஒளியைச் சிந்தாமல் சிதறாமல் தருவதோடு வட்டமான வெள்ளித்தட்டுப் போன்று வானத்தில் அழகாகக் காட்சியளிக்கிறது. இயற்கை அன்னையின் அற்புத படைப்புதான் நிலா. அது வானத்தில் தோன்றி இனிய வாழ்வைச் சித்தரிக்கின்றது.

**மையக் கருத்து :**

இப்பாடல் அழகு நிலாவின் அழகை எடுத்துக்கூறி இயற்கையின் பேராற்றலை இயம்புகிறது.

**சொல்நயம் :**

சொற்களைச் சிறந்த முறையில் வைப்பது வசனம்;
சிறந்த சொற்களைச் சிறந்த முறையில் வைப்பது கவிதை'
- கோலரிட்ஜ்

CLASSMATE PAGE

www.Padasalai.Net www.TrbTnpsc.com

சிறந்த சொற்களைக் கொண்டு கவிதையை நயம்பட பாடியுள்ளார் கவிஞர்.
இப்பாடலில் அடைச்சொல்லையும், நேரிணைச்சொல்லையும் கவிஞர் பயன்படுத்தியுள்ளார்.

சான்று:

அடைச்சொற்கள் : அந்தியிருள், காரிருள், ஒளிமுத்தோ, [illegible]

நேரிணைச்சொல் : சிந்தாமல் சிதறாமல்.

போன்ற சொற்கள் நயமாக அமைந்து பாடலின் பொருளைத் தெளிவாக்குகிறது.

பொருள்நயம்:

இரவில் வானில் தோன்றும் நிலாவின் வெளிச்சம்; இருளிலும் ஒளிதரும் அழகு; குளிர்ச்சியான ஒளியை மட்டுமே தரும் நிலா; என்று நிலாவின் பண்பை விளக்க அழகான சொற்களைக் கொண்டு தான் கூறவந்த பொருளான நிலாவைப் பற்றி மிகச் சிறந்த முறையில் இக்கவிதையை இயற்றியுள்ளார்.

தொடைநயம்:

பாடலில் மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை ஆகியவற்றைக் கொண்டு தொடுப்பது தொடையாகும்.

மோனைநயம்:

"அடிதொறுந் தலைஎழுத்து ஒப்பது மோனை"

- தொல்காப்பியம்.

சீர்களிலோ, அடிகளிலோ முதலெழுத்து ஒன்றிவர தொடுப்பது மோனையாகும்.
இப்பாடலில் சீர்மோனை பயின்று வந்துள்ளது.

சான்று:

அந்தியிருளாற் - அவ்வாறே
பிந்தியந்தக் - பெருஞ்சிரிப்பின்
சிந்தாமல் - சிதறாமல் - சேகரித்து

எதுகைநயம்:

"அஃது ஒழிந்தவற்றின் எதுகை ஆகும்"

- தொல்காப்பியம்.

பாடலின் அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாவது எழுத்து ஒன்றி வருவது எதுகை எனப்படும்.
இப்பாடலில் அடி எதுகை பயின்று வந்துள்ளது.

சான்று:

அந்தியிருளாற்
பிந்தியந்த



Scanned by CamScanner

DATE

சிறுத்தாமல்

இருந்தாவேன்

**இயைபு நயம்:**

"இறுவாய் ஒப்பின் அது இயைபு என மொழிப"

– தொல்காப்பியம்

ஒரு செய்யுளில் ஒன்றுக்கு மேற்பட்ட அடிகளின் இறுதி எழுத்தோ அல்லது இறுதி சொல்லோ, அல்லது ஒரே அடியில் உள்ள சீர்களின் எழுத்துகள் ஒன்றி வந்தாலும் அஃது இயைபு எனப்படும்.

இப்பாடலில் சீர் இயைபு பயின்று வந்துள்ளது.

**சான்று:**

திசைகள் கண்டேன் - யான் கண்டேன் - உலகு கண்டேன்

நிலவே நீதான் - காரிருள் தான்

**சந்த நயம்:**

'சந்தம் தமிழுக்குச் சொந்தம்'

இப்பாடலை ஏற்ற இசைக்கருவியுடன் இசைத்துப் பாடினால் பாடுவோர்க்கும் கேட்பவர்க்கும் மிகுந்த கவிநயத்துடனும், தாள நயத்துடனும், சந்த நயத்துடனும் கவிஞர் இப்பாடலை இயற்றியுள்ளார்.

இப்பாடல் எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பா வகையைச் சார்ந்தது.

**சுவை நயம்:**

"நகையே அழுகை இளிவரல் மருட்கை

அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று

அப்பால் எட்டும் மெய்ப்பாடு என்ப"

– தொல்காப்பியம்

இப்பாடல் நிலவின் தன்மையையும், அது ஒளிதரும் அழகையும் பெருமிதத்தில் கூறுவதால் இப்பாடலில் பெருமிதச் சுவை பயின்று வந்துள்ளது.

**அணி நயம்:**

"அணி செந்தமிழ்க் கவிதைக்குப் பணி"

இப்பாடலில் கவிஞர் உள்ளதை உள்ளபடியே கூறியுள்ளதால் இப்பாடலில் இயல்பு நவிற்சி அணி பயின்று வந்துள்ளது.

**முடிவுரை:**

காலம் கவிஞனைக் கொன்றது; ஆனால் அவன் கவிதை காலத்தை வென்றது" என்ற கூற்றிற்கு ஏற்ப கவிஞர் பாரதிதாசன் இக்கவிதையில் கவிதைக்குரிய நயங்கள் எல்லாம் அமைத்து கவிநயங்களால் தமிழன்னைக்குப் பெருமை சேர்த்துள்ளார்.



Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

DATE

இலக்கிய நயம் பாராட்டுக

பூமிச்சருகாம் பாலையை
முத்துபூத்த கடல்களாக்குவேன்
புயலைக் கூறுபடுத்தியே – கோடிப்
புதிய தென்றலாக்குவேன்
இரவில் விண்மீன் காசினை – செலுத்தி
இரவலரோடு பேசுவேன்!
இரவெரிக்கும் பரிதியை – ஏழை
விறகெரிக்க வீசுவேன்

– நா.காமராசன்

## புதிய பூமி

**முன்னுரை:**

தமிழ் புதுக்கவிதை இயக்க முன்னோடியும் தமிழ்த்திரைப்படப் பாடலாசிரியரும் ஆவார். தொடக்கத்தில் மரபுக் கவிதைகள் எழுதிவந்த இவர் காலப்போக்கில் வசனக்கவிதை, புதுக்கவிதை ஆகிய துறைகளுக்கு மாறி அவற்றிலே தன் சிறப்பை வெளிப்படுத்தினார். 'புதுக்கவிதையின் அரசன்' என்று அழைக்கப்பட்ட நா. காமராசன் அவர்கள் எழுதியுள்ள இப்பாடலின் நயங்களைக் காண்போம்.

**திரண்ட கருத்து:**

பூமியில் இருக்கும் பாலைவனங்களை எல்லாம் முத்து பூத்த கடல்களாக மாற்றுவேன். வீசிவரும் புயலைக் கூறுகளாக்கியே கோடி புதிய தென்றலாக்குவேன். வானில் இரவில் தெரியும் விண்மீன்களை எல்லாம் காசுகளாக மாற்றி இரவலர்களோடு பேசுவேன். சுட்டெரிக்கும் சூரியனைப் பிடித்து ஏழைகளின் வீட்டில் விறகாக வீசி எறிவேன்.

**மையக்கருத்து:**

இல்லாமை என்பது இல்லாமல் ஆகவேண்டும். நாடெங்கும் வளமை செழிக்க வேண்டும்.

**சொல் நயம்:**

"சொற்களைச் சிறந்த முறையில் வைப்பது வசனம்;
சிறந்த சொற்களைச் சிறந்த முறையில் வைப்பது கவிதை"
– கோலரிட்ஜ்

சிறந்த சொற்களைக் கொண்டு கவிதையை நயம்பட பாடியுள்ளார் கவிஞர். இப்பாடலில் அடைச்சொல்லைக் கவிஞர் பயன்படுத்தியுள்ளார்.

PAGE

classmate

Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

DATE

சான்று:

அடைச்சொற்கள் : பூமிச்சருகாம், முத்து பூத்த கடல், புதிய தென்றல், மின்மினி காசு, இரவெறிக்கும் பரிதி. போன்ற சொற்கள் நயமாக அமைந்து பாடலின் பொருளைத் தெளிவாக்கிறது.

பொருள்நயம்:

இப்பூமியில் இல்லாமை என்பது இல்லாமல் இருக்க வேண்டும் என்றால், இரவலர்கள் இருக்க கூடாது, ஏழைகள் இருக்க கூடாது, பூமி வளமானதாக இருக்க வேண்டும், இயற்கைப் பேரிடர்கள் வரக்கூடாது, எல்லோரும் வளமாக வேண்டும் என்னும் பொருளை உணர்த்த பொருத்தமான சொற்களைக் கையாண்டு மிகச் சிறந்த முறையில் இக்கவிதையை இயற்றியுள்ளார்.

தொடைநயம்:

[redacted] பாடலில் மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை ஆகியவற்றைக் கொண்டு தொடுப்பது தொடையாகும்.

மோனைநயம்:

"அடிதொறுந் தலைஎழுத்து ஒப்பது மோனை"

– தொல்காப்பியம்

சீர்களிலோ, அடிகளிலோ முதல் எழுத்து ஒன்றி வர தொடுப்பது மோனையாகும். இப்பாடலில் சீர்மோனை, அடிமோனை பயின்று வந்துள்ளது.

சான்று

பூமிச்சருகாம் – பாலைவனம்

புயலைக் – புதிய

இரவில் – இரவலரோடு

இப்பாடலில் அடி மோனை பயின்று வந்துள்ளது.

பூமிச்சருகாம் இரவில்

புயலை இரவெறிக்கும்

எதுகைநயம்:

"அஃது ஒழிந்தவற்றின் எதுகை ஆகும்"

– தொல்காப்பியம்

பாடலின் அடிதோறும் அல்லது சீர்தோறும் முதல் எழுத்து அளவொத்து நிற்க இரண்டாவது எழுத்து ஒன்றி வருவது எதுகை எனப்படும். இப்பாடலில் சீர் எதுகை, அடி எதுகை பயின்று வந்துள்ளது.

சீர் எதுகை:

சான்று:

இரவில் – இரவலரோடு

அடி எதுகை:

classmate

PAGE

Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

DATE

சான்று:

இரவில்

இரவெரிக்கும்

## இயைபு நயம்:

"இறுவாய் ஒப்பின் அது இயைபு என மொழிப"

— தொல்காப்பியம்

ஒரு செய்யுளில் ஒன்றுக்கு மேற்பட்ட அடிகளின் இறுதியில் உள்ள எழுத்தோ அல்லது இறுதி சொல்லோ, அல்லது ஒரே அடிகளின் அடியில் உள்ள சீர்களின் எழுத்துகள் ஒன்றி வந்தாலும் அஃது இயைபு எனப்படும்.

இப்பாடலில் அடி இயைபு பயின்று வந்துள்ளது.

சான்று:

கடல்களாக்குவேன்

தென்றலாக்குவேன்

பேசுவேன்

வீசுவேன்

## முரண் நயம்:

"மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே"

— தொல்காப்பியம்

செய்யுளில் சொல் அல்லது பொருள் முரண்பட்டு நயம் பயக்கும் வகையில் அமைவது முரண் தொடையாகும்.

இப்பாடலில் இடம்பெற்றுள்ள முரண் தொடைச் சொல்

புயல் x தென்றல்.

## சந்த நயம்:

"சந்தம் தமிழுக்குச் சொந்தம்"

இப்பாடலை ஏற்ற இசைக் கருவியுடன் இசைத்துப் பாடினால் பாடுவோருக்கும் கேட்பவர்க்கும் மிகுந்த கவிநயத்துடனும், தாளநயத்துடனும், சந்த நயத்துடனும் கவிஞர் இப்பாடலை இயற்றியுள்ளார்.

இப்பாடல் சிந்துப்பா வகையைச் சார்ந்தது.

## அணி நயம்:

"அணி செந்தமிழ் கவிதைக்குப் பணி"

இப்பாடலில் பாலையை முத்துபூத்த கடலாக்குவேன் என்றும், விண்மீனை காசாக்குவேன் என்றும் பாடியுள்ளார். பாலையை முத்துபூத்த கடலாகவும், விண்மீன்களைக் காசாகவும் உருவகப்படுத்தியுள்ளதால் இப்பாடலில் உருவக அணி பயின்று வந்துள்ளது.

classmate PAGE

Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

**சுவை நயம்:**

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டும் மெய்ப்பாடு என்ப"

-தொல்காப்பியம்

இப்பாடலில் இயற்கை பொருட்களை மாற்றம் செய்து இல்லாமையை அகற்றுவோன் என்று கவிஞர் கூறுவதன் இப்பாடலில் மருட்கை சுவை பயின்று வந்துள்ளது.

**முடிவுரை:**

"காலம் கவிஞனைக் கொன்றது ; ஆனால்
அவன் கவிதை காலத்தை வென்றது" - என்ற

கூற்றிற்கு ஏற்ப கவிஞர் நா. காமராசன் இக்கவிதையால் கவிதைக்குரிய நயங்கள் எல்லாம் அமைத்து கவிநயங்களால் தமிழன்னைக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

DATE

**இலக்கிய நயம் பாராட்டுதல்**

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்.
தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்.
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே.
– திரிகூட ராசப்பக் கவிராயர்

**முன்னுரை:**

திரிகூட ராசப்பக் கவிராயர் இளம் பருவத்திலேயே தமிழ்க்கல்வி பயின்று அதில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார். மடக்கு, திரிபு, சிலேடை முதலிய சொல்லணிகளும், உவமை முதலிய பொருளணிகளும் சிறப்பாகப் பாடுவதில் வல்லவர். திருக்குற்றால நாதராகிய திரிகூடராசப் பெருமான் மீது பதினான்கு நூல்கள் பாடியுள்ளார். அவர் பாடியுள்ள திருக்குற்றாலக் குறவஞ்சி என்ற நூலால் இடம் பெற்றார். இப்பாடலில் அமைந்துள்ள நயங்களைக் காண்போம்.

**திரண்ட கருத்து:**

ஆண் குரங்குகள் பல்வகைப் பழங்களைப் பறித்துக் கொடுத்துப் பெண் குரங்குகளோடு கொஞ்சும்; அக்குரங்குகளால் சிதறியெறியப்படுகின்ற பழங்களுக்கு வானுலகத்தில் வாழும் தேவர்கள் இரந்து இரந்து வேண்டிக் கேட்பார்கள்; வனவேடர்கள் தம் கண்களால் எறிந்துப் பார்த்து உற்றுநோக்கித் தேவர்களை அழைப்பார்கள். வானின் வழியாகச் செல்கின்ற சித்தர்கள் கீழிறங்கி வந்து காயசித்தி மருந்துகளாகிய வன மூலிகைகளை வளர்ப்பார்கள்; தேன் கலந்த மலையருவியானது அலைகள் மேலெழுந்து வானத்திலிருந்தும் வழிந்து ஓடும். அதனால் சிறந்த ஞாயிற்றின் தேரில் பூட்டிச் செல்லும் குதிரைக்கால்களும் தேர்ச்சக்கரமும் வழுக்கி விழும்; வளைந்துள்ள இளம் பிறையைச் சூடியிருக்கின்ற சடைமுடியையுடைய அழகரான திருக்குற்றால நாதர் எழுந்தருளியிருக்கின்ற திருக்குற்றாலமாகிய இச்சிறப்பு வாய்ந்த திரிகூட மலையே எங்களுக்குரிமையாக நாங்கள் வாழ்கின்ற மலையாகும்.

**மையக் கருத்து:**

குற்றால மலையின் வளத்தையும், குற்றால அருவியின் சிறப்பையும் கவிஞர் எடுத்துரைக்கின்றார்.

PAGE

classmate

Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

DATE

**சொல்நயம்:**

"சொற்களைச் சிறந்த முறையில் வைப்பது வசனம்;
சிறந்த சொற்களைச் சிறந்த முறையில் வைப்பது கவிதை"
- கோலரிட்ஜ்

சிறந்த சொற்களைக்கொண்டு கவிதையை நயம்பட பாடியுள்ளார் கவிஞர். இப்பாடலில் அடைச்சொற்களையும் அகராதிச் சொற்களையும் கவிஞர் பயன்படுத்தியுள்ளார்.

**சான்று:**

அடைச்சொற்கள்: தேனருவி, செங்கதிரோன், கூனலிளம், வேணியலங்காரர்

அகராதிச் சொற்கள்: கானவர் - வேடர்

வான்கவிகள் - வானத்திலுள்ள தேவர்கள்

கவனசித்தர் - வான் வழியாகச் செல்லும் சித்தர்கள்

காயசித்தி - உடலை அழியாது நிலை பெறச் செய்தல்.

இவை போன்ற சொற்களை நயமாக அமைத்துப் பாடலின் பொருளைத் தெளிவாக்கியுள்ளார்.

**பொருள்நயம்:**

குற்றால மலையையும், அதில் வழிகின்ற அருவியின் சிறப்பையும் விளக்குவதற்காக, வானில் உள்ள தேவர்கள், சித்தர்கள் இங்கே இறங்கி வந்து தங்கள் உடல் அழியாமல் இருக்க மூலிகைகளை வளர்ப்பர். அருவியின் அலை சூரியனின் தேர்ச்சக்கரத்தையும், குதிரையின் கால்களையும் வழுக்கிவிடச் செய்யும் என்று கூறவந்த குற்றால மலை, குற்றால அருவியின் சிறப்பையும் உணர்த்த பொருத்தமான சொற்களைக் கையாண்டு மிகச் சிறந்த முறையில் இக்கவிதையை இயற்றியுள்ளார்.

**தொடைநயம்:**

பாடலில் மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை ஆகியவற்றைக் கொண்டு தொடுப்பது தொடையாகும்.

**மோனைநயம்:**

"அடிதொறும் தலை எழுத்து ஒப்பது மோனை"
- தொல்காப்பியம்

சீர்களிலோ, அடிகளிலோ முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனையாகும். இப்பாடலில் சீர்மோனை பயின்று வந்துள்ளது.

**சான்று:**

வானரங்கள் - வான்கவிகள்

கானவர்கள் - கவனசித்தர் - காயசித்தி



Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

DATE

தேனருவி - திரையெழும்பி - தேர்க்காலும்
கூனலிளம் - குற்றாலத்

எதுகை நயம்:

"அஃது ஒழிந்தவற்றின் எதுகை ஆகும்"
- தொல்காப்பியம்.

பாடலின் அடிதோறும் அல்லது சீர்தோறும் முதல் எழுத்து அளவொத்து நிற்க இரண்டாவது எழுத்து ஒன்றி வருவது எதுகை எனப்படும். இப்பாடல் சீர்எதுகை மற்றும் அடி எதுகை பயின்று வந்துள்ளது.

~~[illegible]~~ சீர்எதுகை:

சான்று:

வானரங்கள் - வான்கவிகள்
கானவர்கள் - வானவரை
தேனருவி - வானின்

அடி எதுகை:

சான்று:

வானரங்கள்
கானவர்கள்
தேனருவி
கூனலிளம்

இயைபு நயம்:

இறுவாய் ஒப்பின் அது இயைபு என மொழிப
- தொல்காப்பியம்

ஒரு செய்யுளின் ஒன்றுக்கு மேற்பட்ட அடிகளின் இறுதியில் உள்ள எழுத்தோ அல்லது இறுதி சொல்லோ அல்லது ஒரே அடியில் உள்ள சீர்களோ, சீரின் இறுதி எழுத்தோ ஒன்றி வந்தாலும் அஃது இயைபு எனப்படும். இப்பாடலில் சீர் இயைபு பயின்று வந்துள்ளது.

சான்று:

கொஞ்சும் - கெஞ்சும்
அழைப்பார் - அழைப்பார்
வழுகும் - ஒழுகும்

சந்தநயம்:

'சந்தம் தமிழுக்குச் சொந்தம்'

இப்பாடலை ஏற்ற இசைக் கருவியுடன் இசைத்துப் பாடினால் பாடுவோர்க்கும் கேட்பவர்க்கும் மிகுந்த கவிநயத்துடனும், தாள நயத்துடனும்,



classmate

Scanned by CamScanner

எம்.ஏ.ஜெஸ்டின் 9843448095

DATE

சந்த நயத்துடனும் கவிஞர் இப்பாடலை இயற்றியுள்ளார்.

ஒழுகும் என்பதற்கேற்ப இசைநோக்கி வழுக்கும் என்பது வழுகும் எனக் ககரம் குறைந்து சந்த நயத்திற்காக நின்றது.

இப்பாடல் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தப் பா வகையைச் சார்ந்தது.

கற்பனை நயம்:

"[illegible]"

இப்பாடலில் அருவியானது வானின் வழி ஒழுகும் என்றும், அந்நீரில் சூரியனின் தேர்ச்சக்கரமும், குதிரைக் காலும் வழுக்கி விழும் என்றும் கவிஞர் கூறியுள்ளது இவரது படைப்புக் கற்பனைக்கு சிறந்த எடுத்துகாட்டாகும்.

அணிநயம்:

"அணி செந்தமிழ் கவிதைக்குப் பணி"

இப்பாடலில் கவிஞர் குற்றால மலையின் இயல்புகளை உயர்த்திக் கூறியுள்ளதால் இப்பாடலில் உயர்வு நவிற்சி அணி பயின்று வந்துள்ளது.

சுவை நயம்:

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப"
– தொல்காப்பியம்

இப்பாடலில், தேனருவி திரை எழும்பி வானின்வழி ஒழுகும், தேர்க்காலும் வழுகும் என்பன மிக்க சுவையுடைய பகுதிகளாகும். குற்றால மலையின் சிறப்பை மிகவும் பெருமிதத்தோடு கவிஞர் கூறுவதால் இப்பாடலில் பெருமிதச் சுவை பயின்று வந்துள்ளது.

முடிவுரை:

"காலம் கவிஞனைக் கொன்றது; ஆனால்
அவன் கவிதை காலத்தை வென்றது" – என்ற கூற்றிற்கு ஏற்ப கவிஞர் திரிகூட ராசப்ப கவிராயர் இக்கவிதையில் கவிதைக்குரிய நயங்கள் எல்லாம் அமைத்து கவிநயங்களால் தமிழன்னைக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

மாணாக்கரே!

கேள்வியைக் கவனித்து எத்தனை நயங்கள் கேட்கப்பட்டிருக்கின்றதோ அத்தனை நயங்கள் மட்டும் எழுதினால் போதுமானதாகும்.

classmate

PAGE

Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

மாணாக்கர்களே!

இலக்கிய நயம் பாராட்டல் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. தேர்விற்கு முழுமையாக எழுத வேண்டிய அவசியம் இல்லை. வினாவில் கேட்கப்பட்டிருக்கும் மையக்கருத்து, மற்றும் மூன்று நயங்கள் எழுதினால் போதுமானது. உங்களது புரிதலுக்காகவே விளக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் உங்களுக்கு எளிதாகத் தெரியும் மூன்று நயங்கள் மட்டுமே எழுதினால் போதுமானதாகும்.

எம். பி. ஜெவஸ்டின்
முதுகலைத் தமிழாசிரியர்
கார்மல் மேல்நிலைப் பள்ளி,
நாகர்கோவில் - 4
அழைக்க: 9843448095

Padasalai
Scanned by CamScanner